கடனாக வழங்கியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு *1991*-க்குப் பின்னர் நாம் சுமார் *20,831* நபர்களுக்கு ரூ.*1034* லட்சம் ரூபாய் கடனாக வழங்கியிருக்கிறோம். *10* ஆண்டுகளில் அவர்கள் *18* லட்சம் ரூபாய் வழங்கினார்கள். ஆனால், இன்றைக்கு புர்ட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இத்துணை உதவிகளை தமிழகத்தில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நாம் செய்திருக்கிறோம். இதுபோன்று சிறுபான்மை சமுதாயத்தினராக இருந்தாலும் ஒரு லட்சம் ரூபாய் என்பது தனி நபருக்கு வழங்கப்படுகின்ற கடன். எனவே, அவர்கள் கூட்டாக தொழில் செய்வார்களேயானால் அவர்களுக்கு ரூ.*5* லட்சம் வரை கடன் வழங்க எந்தத் தடையும் இல்லை. அதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும். எனவே, எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட நிதி நிறுவனத்தில் வந்திருக்கின்ற மனுக்களின் அடிப்படையில் நாம் பார்த்தோமானால் சிறுபான்மையினர் மிகக் குறைவாக மனுக்களைக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த மனுக்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. எனவே சிறுபான்மையினர் அதிகம்பேர் அந்த நிறுவனத்தினுடைய உதவிகளைப் பெறவேண்டும். இப்போது இருக்கின்ற நிதி நிறுவனத்திலேயே சிறுபான்மை சமுதாயத்தினர் அதிகம்பேர் நாட்டம் கொண்டு கடன் பெறுவதற்குத் தயாராக இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதிகம்பேர் அந்த நிறுவனத்திலே கடன் பெறுகின்ற முயற்சி செய்தால் நாம் அதற்கு அதிகமாக வழங்க வேண்டும் என்கிற உணர்வு ஏற்படுமானால், அல்லது தேவை ஏற்படுமானால் உறுதியாக புதிய அமைப்புகளை உருவாக்க இந்த அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் *112*, திரு. டி. வேலையா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

112--

தெற்கூரில் நடுநிலைப் பள்ளி தொடங்குதல்

***37427--திரு. டி. வேலையா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 23]

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி, பாளையங்கோட்டை கல்விச் சரகம் கீழநத்தம் தெற்கூரில் ஒரு நடுநிலைப் பள்ளி தொடங்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி, பாளையங்கோட்டை கல்வி சரகம் கீழநத்தம் தெற்கூர் கிராமத்தில் ஆர்.சி. துவக்கப் பள்ளி மட்டுமே உள்ளது. மேற்படி ஆர்.சி. துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த கருத்துருக்கள் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தத் தனியார் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக ஆக்கவேண்டுமென்ற பொருளில் கேட்கவில்லை. நமது அரசின் மூலமாக அங்கே ஒரு நடுநிலைப்பள்ளி ஆரம்பிக்கப்படுமா, அல்லது இதே பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு என்னென்ன நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும். அந்தப் பகுதி நகரத்தினுடைய ஒரு புறப்பகுதி ஆகும். போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிற பகுதி. தாழ்த்தப்பட்ட மக்களும், ஏழை எளிய மக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் வாழ்கின்ற பகுதி. ஆகவே அங்கே ஒரு பள்ளி நிச்சயமாக வேண்டும். அதை ஏற்படுத்தித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும், என்னென்ன நிபந்தனைகள் நிறைவேற்றப்பெறவேண்டும் என்று அறிவிப்பார்களா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பொதுவாக நடுநிலைப் பள்ளிகளை மட்டும் தொடங்குவதில்லை. அரசு தொடக்கப் பள்ளிகள் இருந்தால் அவை நடுநிலைப் பள்ளிகளாக மேம்படுத்தப்படுகின்றன. தனியார் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கான வாய்ப்பை 1989-ஆம் ஆண்டிலேயிருந்து அரசு நிறுத்தி வைத்திருக்கிறது. காரணம் ஆசிரியர் பயிற்சி பள்ளி அனுமதி பெறுவதற்கு நடுநிலைப் பள்ளி ஒன்று அந்த முகமையின் பெயரிலே இருக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனை இருந்தது. அந்த நிபந்தனையை நிறைவு செய்வதற்காக, தவறான வழிகளிலே ஒரு சிலர் பள்ளிகளைத் தொடங்குவதற்கு முயற்சி எடுத்ததன் காரணமாகத்தான் நிறுத்தி வைக்கப்பட்டது. இப்போது தனியார்களுக்கு நடுநிலைப் பள்ளிகளைத் தனியாகத் தருகின்ற வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற வகையில் அந்தப் பள்ளியை

[*1996 பிப்ரவரி 23*

நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டுமானால் அந்தப் பள்ளி சுயநிதி பள்ளியாக மட்டும் அத்தகைய நடுநிலைப் பள்ளியாகச் செயல்பட முடியும். அப்படி அந்தப் பள்ளியில் நிர்வாகம் விரும்பினால், அரசுக்குக் கருத்துருக்கள் வரப்பெற்றால், அரசு அது பற்றி ஆராயும். நிதி உதவி தருகின்ற வாய்ப்பு இல்லை.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைமுறையிலுள்ள ஒரு சிக்கலான பிரச்சினையை நான் இங்கே கூற விரும்புகிறேன். பல்வேறு கோரிக்கைகளை அமைச்சரிடம் கேள்விகளின் மூலமாக நாங்கள் வைக்கிறபோது, மாவட்ட அளவிலே இருக்கிற அதிகாரிகள் என்ன பதிலை அனுப்புகிறார்கள், அங்கே உள்ள சூழ்நிலையை அவர்கள் எவ்வாறு கணித்துச் செய்கிறார்கள் என்கின்ற விவரங்கள் எங்களுக்குத் தெரியாமலேயே போய்விடுகிறது. சட்டமன்றத்திற்கு வந்த பிறகுதான் என்னென்ன காரணங்கள் இருக்கின்றன, தர முடியும், முடியாது என்கின்ற பதில்களை நாங்கள் பெறுகின்றோம். எங்களுக்கு அது சர்பிரைசாகக்கூட சில நேரங்களில் இருக்கிறது. அந்தக் கேள்விகள் கீழ்மட்டத்திற்கு வருகின்றபோது, பொதுமக்கள் பிரதிநிதியாக இருக்கின்ற எங்களைக் கலந்துகொண்டு பதில்களை அவர்கள் அனுப்பினால், கீழ்மட்டத்திலேயே எதை எதை அந்த நேரத்திலேயே செய்ய முடியுமோ அதை எல்லாம் நாங்கள் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தவறான முன்மாதிரி. நீங்கள் கேள்வி கேட்பதே இங்கே இருந்து விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காகத்தான். கேள்விக்குரிய பதில்களை உங்களைக் கேட்டு தரச்சொல்ல வேண்டுமென்று சொன்னால், பிறகு இங்கே வரவேண்டியதில்லை. உங்கள் அளவிலேயே முடித்துக் கொள்ளலாம்.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது சட்டத்திற்கு உட்பட்டு, தவறு இல்லை என்கின்ற செய்தியை நாங்கள் தெரிந்து கொள்வதில் தவறு இருக்காது என்று நான் கருதுகிறேன். காரணம் என்ன என்று சொன்னால் இங்கே வந்த பிறகுதான், பதில் வந்த பிறகுதான் அந்தச் சூழ்நிலைகளைப் புரிந்துகொள்ள முடிகிறது. அரசுக்கு ஆபத்து இல்லாத, அல்லது பிரச்சினை இல்லாத பதில்களை நாங்கள் தெரிந்து கொள்வதிலே எந்தவிதமான தவறும் இருக்காது என்று நான் கருதுகிறேன். இப்படி இந்த பதில்களை தந்ததற்குப் பிறகும்கூட நாங்கள் அந்த அதிகாரிகளிடம் சென்று மீண்டும் மீண்டும் நாங்கள் கேட்டு பல்வேறு தகவல்களைத் தெரிந்து கொள்ள

1996 பிப்ரவரி 23]

வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த அதிகாரிகள் எங்களைக் கலந்துகொண்டு சில தகவல்களைத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், மேலும் அந்தப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுத்தால் அதை அரசு பரிசீலிக்குமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே வினாக்கள் வைக்கப்படும்போது நிர்வாகத்திலே இருந்து சரியான பதில்களைப் பெற்றுத் தருவது அரசின் கடமையாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்துதான் பதில் இங்கே வரவேண்டுமென்று சொன்னால் அது நிர்வாகமாக இருக்காது. அது ஓர் ஆலோசனைக் குழுவாக மாறிவிடும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல்கள் வேண்டுமென்றால் உரிய அதிகாரிகளிடத்திலே தெரிந்து கொள்ளலாம், அல்லது அமைச்சரிடத்திலேயிருந்து தெரிந்து கொள்ளலாம், அல்லது துறையிலே யாரை வேண்டுமானாலும் சந்தித்து தேவையான விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வளவு வாய்ப்புகள் இருக்கின்றபோது, ஒரு ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்களுக்கு, சட்டமன்றத்திலே இதைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலைமை இல்லை. அந்தப் பள்ளியை தரம் உயர்த்துவதற்கு உரிய முறையில் கருத்துருக்கள் வரப்பெறுமானால் 'நிதி உதவியின்றி நாங்கள் நடத்துகிறோம்' என்று வருமானால் அரசு அதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 113, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

113--

நவோதயா பள்ளிகள் திறத்தல்

87529--திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்தில் நவோதயா பள்ளிகளைத் திறப்பது குறித்து ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?